நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

**பிரிவு 313(1)(ஆ) CrPC –இன் படியான விசாரணை**

எதிரி : சௌந்திரராஜன்

| | | | |
|---|---|---|---|
| 1 | கேள்வி | : | அ.சா.4–திரு.கருப்பசாமி அவருடைய சாட்சியத்தில், 13.02.2022ம் தேதி அ.சா.4ன் தம்பி இவ்வழக்கு விபத்தில் இறந்த மாரீஸ்வரன் வேலை முடித்து வீட்டிற்கு வரவில்லை என்பதால் அவரை தேடி அ.சா.4–கருப்பசாமி உப்பத்தூர் விலக்கிற்கு வந்ததாவும், அங்கிருந்த ரோந்து போலீசாரிடம் கேட்டபோது அ.சா.4ன் தம்பி மாரீஸ்வரனுக்கு உப்பத்தூர் விலக்கில் வைத்து இன்னோவா கார் மோதி விபத்து ஏற்பட்டு, அவரை அவசர ஊர்தி வாகனம் மூலம் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக கூறியதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | CT 100 இருசக்கர வாகனத்தில் மது அருந்தி வந்த நபர் நான்கு வழிச்சாலையில் குறுக்கே வந்ததால் விபத்து ஏற்பட்டது. |
| 2 | கேள்வி | : | அ.சா.4–திரு.கருப்பசாமி மேலும் அவருடைய சாட்சியத்தில், அ.சா.4–கருப்பசாமி மற்றும் அவருடைய உறவினர்கள் சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது மாரீஸ்வரனை மேல் சிகிச்சைக்காக விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருந்ததாகவும், அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு இரண்டு நாட்கள் சிகிச்சையிலிருந்த அ.சா.4–ன் தம்பி மாரீஸ்வரன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், மேற்படி விபத்து தொடர்பாக அ.சா.4–ன் அப்பா நிகழ்நிலை புகார்தாரர் சரவணன் புகார் கொடுத்ததாவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது, ஆனால் விபத்து ஏற்பட்ட உடனேயே நான் காவல் நிலையத்திற்கு சென்று ஆஜராகிவிட்டேன். |
| 3 | கேள்வி | : | அ.சா.3–திரு. மூக்கையா சிறப்பு சார்பு ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில், 14.02.2022 ம் தேதி 17.00 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு.சதீஸ்குமார் நிலைய அலுவலில் இருந்த போது பொன்னுச்சாமி மகன் சரவணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை (அ.சா.ஆ.2) பெற்று புகார் மனுவின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 33/2022 பிரிவுகள் 279, 337 இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | என் மீது வழக்குப்பதிவு செய்து இருப்பதாக சாத்தூர் காவல் நிலையத்தில் கூறினார்கள். |

| | | | |
|---|---|---|---|
| 4 | கேள்வி | : | அ.சா.3– மேலும் அவருடைய சாட்சியத்தில், வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.சதீஸ்குமார் 14.02.2022 ம் தேதி மாலை 06.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரியப்பன் மற்றும் இன்னாசிமுத்து, ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் (அ.சா.ஆ.4) மற்றும் வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | தெரியாது |
| 5 | கேள்வி | | அ.சா.3 மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.சதீஸ்குமார் சாட்சிகள் சரவணன், ஊர்த்தேவன், கருப்பசாமி, மயில்ராஜ், மாரியப்பன், இன்னாசிமுத்து ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | தெரியாது |
| 6 | கேள்வி | | அ.சா.3 மேலும் அவருடைய சாட்சியத்தில், சார்பு ஆய்வாளர் திரு.சதீஸ்குமார் இவ்வழக்கில் காயம்பட்டு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாரீஸ்வரன் என்பவர் 16.02.2022 ம் தேதி 00.05 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக கிடைத்த தகவலினை பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.ச.விலிருந்து 279, 304(A) இ.த.ச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையினை (அ.சா.ஆ.6) தயார் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | தெரியாது |
| 7. | கேள்வி | | அ.சா.3 மேலும் அவருடைய சாட்சியத்தில், வழக்கினை அன்றே விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.செல்லப்பாண்டி, சார்பு ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை விசாரணை செய்துள்ளதாகவும், சாட்சி சரவணனை விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், மற்ற சாட்சிகள் சார்பு ஆய்வாளரிடம் கூறியதுபோலவே தன்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், சாட்சிகள் காளீஸ்வரி, ரத்தினவேல்பாண்டி, முத்துகிருஷ்ணன், கணேசமூர்த்தி, சர்க்கரைப்பாண்டி ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | தெரியாது |
| 8. | கேள்வி | | அ.சா.3 மேலும் அவருடைய சாட்சியத்தில் காவல் ஆய்வாளர் திரு.செல்லப்பாண்டி 16.02.2022 ம் தேதி காலை 00.05 மணிக்கு இறந்து போன மாரீஸ்வரன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்பாக பிரேத விசாரணை செய்து அறிக்கை (அ.சா.ஆ.7) தயார் செய்துள்ளதாகவும், |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரேத விசாரணை சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பிரேதத்தை தலைமை காவலர் செல்லமுனியாண்டி என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அரசு மருத்துவரிடம் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக ஒப்படைக்க அனுப்பியுள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | பொய் |
| 9. | கேள்வி | | அ.சா.3 மேலும் அவருடைய சாட்சியத்தில் காவல் ஆய்வாளர் திரு.செல்லப்பாண்டி 16.12.2020ம் தேதி இவ்வழக்கில் விபத்துக்குள்ளான TN 69 V 7099 என்ற பதிவெண் கொண்ட Bajaj CT–100 இருசக்கர வாகனத்தையும் மற்றும் விபத்துக்கு காரணமான TN 96 B 0650 பதிவு எண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தையும் ஆய்வு செய்த விருதுநகர் வட்டார போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செல்வராசு என்பவரை விசாரணை செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் (அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8) பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | அந்த இருசக்கர வாகனம் வந்ததா என்று எனக்கு தெரியாது, நான் ஓட்டிச் சென்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு கொண்டு சென்று அனைத்து ஆவணங்களையும் காண்பித்தேன். |
| 10. | கேள்வி | | அ.சா.3 மேலும் அவருடைய சாட்சியத்தில், காவல் ஆய்வாளர் திரு.செல்லப்பாண்டி இவ்வழக்கு விபத்தில் இறந்த மாரீஸ்வரன் என்பவருக்கு முதல் உதவி சிகிச்சை அளித்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ஜெகநாத் என்பவரை விசாரணை செய்து அவர் வழங்கிய விபத்து பதிவேட்டை(அ.சா.ஆ.9) பெற்று அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளதாகவும், இறந்த மாரீஸ்வரனுக்கு மேல் சிகிச்சை அளித்த விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.நியாஷ்சுதின் என்பவரை விசாரணை செய்து அவர் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றை (அ.சா.ஆ.10) பெற்று அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | பொய் |
| 11. | கேள்வி | | அ.சா.3 மேலும் அவருடைய சாட்சியத்தில் காவல் ஆய்வாளர் திரு.செல்லப்பாண்டி விபத்தில் இறந்த மாரீஸ்வரனின் பிரேதத்தினை பிரேதபரிசோதனை மேற்கொண்ட மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை மருத்துவர் திருமதி.ரமா என்பவரை விசாரணனை செய்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கை (அ.சா.ஆ.11) பெற்று அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளதாகவும், முதல் நிலை காவலர்கள் செல்லமுனியாண்டி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல்விசாரணை செய்த உதவி ஆய்வாளர் சதீஸ்குமார் ஆகியோர்களை |

| | | | |
|---|---|---|---|
| | | | விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | பொய் |
| 12. | கேள்வி | | அ.சா.3 மேலும் அவருடைய சாட்சியத்தில் காவல் ஆய்வாளர் திரு.செல்லப்பாண்டி அவரது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 337, 304(A)–ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | பொய் வழக்கு, என் மீது தவறு இல்லை |
| 13. | கேள்வி | | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | என் மீது தவறு இல்லை |
| 14. | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | இல்லை |

(ஓம்/–திரு.சா.வரதராஜன்)
நீதித்துறை நடுவர், எண்.2, சாத்தூர்.

// உண்மை நகல்// P.P